இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 29-09-2025

# 'வர்றேன்' என்றவர் ஓடினார்!

எந்தக் கட்டுப்பாட்டுக்கும் அடங்காமல், தான்தோன்றித்தனமாக, அராஜகத்தை வழக்கமாகக் கொண்டு நடிகர் விஜய் தரப்பால் நடத்தப்பட்ட கூட்டத்தில் சிக்கி 39 உயிர்கள் பரிதாபமாக இறந்துள்ளன.

**இந்த நாட்டில் இலட்சக்கணக்கானவர்கள் ஒரே இடத்தில் கூடிய பல மாநாடுகள் நடந்துள்ளன. இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்கும் கோவில் திருவிழாக்கள் நடந்துள்ளன. அங்கெல்லாம் நடைபெறாத விபத்து, இது போன்ற வேன் பரப்புரையில் நடந்ததற்கு என்ன காரணம்? இக்கூட்டத்தை நடத்தியவர்களின் பொறுப்பற்ற தன்மையும், தன்னை ஏதோ பெரிய அவதாரமாகக் காட்டிக் கொள்ளும் ஆணவ எண்ணமும்தான் இத்தகை உயிர்களைக் குடித்துள்ளது. தனது சுயநலத்துக்காக சொந்தக் கட்சிக்காரர்களை, ரசிகர்களை அந்த விளம்பர வெறி தின்றுள்ளது.**

அசம்பாவிதம் நடந்து விடக் கூடாது என்று பார்ப்பது காவல் துறையின் கடமை மட்டுமல்ல, நிகழ்ச்சி நடத்துபவர்களுக்கும் அந்த பொறுப்பு வேண்டும். அதனால் தான் மாநாடுகளை, பொதுக்கூட்டங்களை நடத்துபவர்கள் அவ்வளவு முன்னெச்சரிக்கைகளைச் செய்கிறார்கள். கூட்டத்துக்கு, மாநாட்டுக்கு வரும் தொண்டர்களை முதலில் மதித்து, அவர்களுக்கான இருக்கைகளை, தேவைகளைச் செய்வது என்பது கூட்ட ஏற்பாட்டாளர்களின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

காவல் துறை, கட்டுப்பாடுகள் போடுவது அடக்குமுறையாக அல்ல, அசம்பாவிதம் நடந்துவிடாமல் பார்த்துக் கொள்வதற்காகத்தான். இந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் ஆளும் கட்சிக்கும் போடப்படுகிறது. மாநிலத்தை ஆளும் தி.மு.க.வும், ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க.வும் நடத்தும் கூட்டங்களும் முறையான அனுமதி பெற்றே நடத்தப்படுகிறது. பிரதமர் வந்தாலும், முதலமைச்சர் வந்தாலும் இதே கட்டுப்பாடுகள்தான் விதிக்கப்படுகிறது.

ஆனால் ஏதோ தனக்கு மட்டும் இப்படி கட்டுப்பாடுகள் விதிப்பதாக விஜய், பொய் சொன்னார். கட்டுப்பாடுகளைப் போட்டால், 'பயந்துவிட்டீர்களா?' என்று அவரே உளறிக் கொள்கிறார். நெருக்கமான தெருக்களைக் குறி பார்த்து கேட்கிறார்கள். குறைவான ஆட்கள் வந்தாலும் நிறைய வந்தது போல காட்ட நினைக்கிறார்கள். பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத, பெரிய சாலைகளைக் கொடுத்தால் வாங்க மறுக்கிறார்கள். அங்கே கூட்டம் கூட்டிக் காட்ட முடியாது அவர்களால்.

**காலையில் 8.45 வருவதாக அறிவித்து மதியம் 3 மணிக்கு நாமக்கல்லுக்கும், மதியம் 12 மணிக்கு வருவதாகச் சொல்லி இரவு 7 மணிக்கு கரூருக்கும் வந்துள்ளார் விஜய். தனது ரசிகர்கள் பசியோடு காத்திருப்பதைப் பார்க்கும் குரூர** மனோபாவம் இது. இவைதான் இந்த மாபெரும் பேரழிவுக்குக் காரணம்.

தனக்கும் கட்டுப்பாடு கிடையாது, அரசாங்க கட்டுப்பாட்டுக்கும் அடங்க மாட்டேன் என்று நினைப்பவர்கள் நீதிமன்றங்களுக்காவது அடங்கி இருக்க வேண்டும். விஜய் கட்சி சார்பில் ஒரு நபர், உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார். நாங்கள் அனுமதி கேட்கும் போது பாரபட்சம் இல்லாமல் அனுமதி தர வேண்டும் என்று கேட்டார். **"கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் வரக்கூடாது என நிபந்தனைகளை விதிக்கிறார்கள். அவர்களை வர வேண்டாம் என நாங்கள் எப்படி சொல்ல முடியும்?"** என விஜய் வக்கீல் கேட்டார்.

**"இது போன்ற நிபந்தனைகள் அனைத்து கட்சிகளுக்கும் விதிக்கப்படுவது தானே?"** என நீதிபதி கேள்வி எழுப்பினார். 'ஆம்' என்று அரசு தரப்பின் சார்பில் சொல்லப்பட்டது. **"முழுமையாக போக்குவரத்து பாதிக்கப்பட்டால் மக்கள் பாதிக்கப்பட மாட்டார்களா? யாரும் சட்டத்திற்கு மேலானவர்கள் அல்ல. பொதுக்கூட்டம் நடத்தினாலும் சட்டத்திற்குட்பட்டு நடத்த வேண்டும். தலைவராக இருக்கும் நீங்கள்தான் கூட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும்"** என்று நீதிபதி கடுமையாக எச்சரிக்கை செய்தார். **'சேதப்படுத்தப்பட்ட பொதுச்சொத்துகளுக்கு இழப்பீடு வசூலிக்கப்பட்டதா? இல்லையென்றால் இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட நேரிடும்'** எனவும் நீதிபதி எச்சரிக்கை விடுத்தார்.

**'கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் வர வேண்டாம் என கோரிக்கை விடுத்து மற்றவர்களுக்கு நீங்கள் முன்மாதிரியாக இருக்கலாமே?'** என நீதிபதி அறிவுறுத்தினார். திருச்சி பரப்புரையின் போது விஜய் ரசிகர்களின் செயல்களை புகைப்படமாகவும் காவல்துறை வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அதனை பார்த்த நீதிபதி, **"இவர்கள் இது போன்று உயரமான இடங்களில் ஏறி நின்று ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்தால் யார் பொறுப்பேற்பது? இதனை நீங்கள் ஒழுங்குபடுத்த வேண்டாமா?"** எனவும் நீதிபதி கேள்வி எழுப்பினார். அதன் பிறகும் விஜய் தரப்பு திருந்தவில்லை.

ஊர்வலத்துக்கும், வேன் பிரச்சாரத்துக்கும், பொதுக் கூட்டத்துக்கும், மாநாட்டுக்கும் வித்தியாசம் தெரியாத கும்பலாக அது இருக்கிறது. நூற்றுக்கணக்கானவர்கள் விஜயின் பஸ்ஸை சுற்றி ஊர்வலமாக வருகிறார்கள். பேசும் இடத்தில் பார்க்க வருபவர்களுக்கும், இந்த பஸ்ஸோடு நடந்து வருபவர்களுக்கும் ஏற்படும் தள்ளுமுள்ளு வழக்கமானதாக ஆகிவிட்டது. இவர்களை ஒழுங்குபடுத்தினால், காவல் துறை மீது பாய்கிறார்கள்.

**இந்த களேபரங்கள் எதையும் விஜய் கண்டு கொள்வது இல்லை. அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே மயங்கி விழுகிறார்கள் சிலர். அதைக் கண்டு கொள்ளாமல் பேசுகிறார். ஆம்புலன்ஸில் அவர்களை தூக்கிச் செல்லும் போது, இவர் பஸ்ஸில் கிளம்பி விடுகிறார். அவரது பஸ்ஸை விரட்டி வரும் இரண்டு பைக்குகள் இவரது பஸ்ஸுக்குள் விழுகிறது. அதை குனிந்து பார்த்து விட்டும் நிற்காமல் புறப்படுகிறார். 50 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மரணத்தின் எண்ணிக்கை முப்பதைக் கடந்த பிறகும் திருச்சியில் இருந்து சென்னை புறப்படுகிறார் விஜய். விமான நிலையத்தில் ஊழியர்களுக்கு செல்பி எடுக்க சிரித்தபடி போஸ் கொடுக்கிறார்.**

**'நான் வர்றேன்' என்றவர் ஓடுகிறார். 'எங்கே விஜய்?' என்று கரூரில் அவர்களது ரசிகர்களே தேடுகிறார்கள்.**

**நீதிமன்றங்கள் உத்தரவிட்ட பிறகும், அந்தக் கட்டுப்பாடுகளை மீறியதால்தான் இத்தனை உயிர்ப்பலிகள். இத்தகைய ஒழுங்கீனத்துக்கு தரப்பட்ட விலை, 40 உயிர்கள் என்றால் அதற்கு பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார்? அவர்களுக்கு மனச்சாட்சி இருக்குமா? 'கட்சி' என்பதே கால்ஷீட் ஆகிவிட்டதால், மரணங்களும் சூட்டிங்குகளாக அவரால் பார்க்கப்படுகின்றன. தனது ரோல் முடிந்ததும் 'பேக்கப்' ஆவதுதானே வழக்கம்?!**



கரூரில் நடைபெற்ற துயரச் சம்பவம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர்கள், அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

## ஆறுதல் சொல்ல முடியாத மிகப்பெரிய இழப்பு!

# அனைத்து உதவிகளையும் அரசு செய்து வருகிறது!

## கரூரில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**கரூர், செப். 29-**

**கரூரில் கூட்ட நெரிசலில் இருந்து மீட்கப்பட்டு, அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பொதுமக்களை சந்தித்து, அவர்களின் உடல்நிலை குறித்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கேட்டறிந்தார்.**



அப்போது முதலமைச்சர் அவர்களும் கழக அரசும் சிகிச்சையில் உள்ளவர்கள், பூரண குணமடைவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதை விளக்கிக் கூறி, அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் அமைச்சர்கள் மருத்துவத்துறை அதிகாரிகள் மற்றும் மருத்துவர் குழுவினருடன் கரூர் அரசு மருத்துவமனையில் ஆலோசனை மேற்கொண்டார்.

கூட்ட நெரிசலில் உடல்நலக்குறைவு ஏற்பட்டு, அரசு மருத்துவமனை மற்றும் பிற மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளோருக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்துக் கேட்டறிந்தார். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் தனி கவனம் எடுத்து தரமான சிகிச்சை வழங்கிட, ஆலோசனைகளை வழங்கினார்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அளித்த பேட்டியின் வருமாறு:

நேற்று மாலை, கரூரில் நடந்த மிக மிக துயரமான சம்பவம், இது மாதிரியான ஒரு சம்பவம் நடந்திருக்கவே கூடாது. அரசின் சார்பாக, முழு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்தாலும், இப்படி ஒரு மிகப்பெரிய கோர விபத்து நடந்து, 40 பேரை அந்த விபத்தில் இழந்து இருக்கிறோம்.

**மிகுந்த சோகத்தில் முதல்வர்!**

முதலமைச்சர் அவர்கள் நேற்று இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன், இங்கு இருக்கின்ற சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள். மாவட்ட ஆட்சித் தலைவர், பக்கத்து மாவட்டத்தில் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஏழு அமைச்சர் பெருமக்களை உடனடியாக இந்தப் பகுதிக்கு வரவழைத்து என்னென்ன மருத்துவ உதவிகள் தேவையோ, அவற்றையெல்லாம் உடனடியாகச் செய்ய சொன்னார். முதலமைச்சர் அவர்கள் மிகுந்த சோகத்தில் இருந்ததால், அவரால் இதைத் தாங்க முடியவில்லை.

நான் நான்கு நாட்கள் ஓய்வுக்காக குடும்பத்துடன் வெளிநாட்டில் இருந்தேன். என்னிடத்தில் முதலமைச்சர் அவர்கள் தொடர்பு கொண்டு மிகுந்த வேதனையுடன் பேசிக் கொண்டிருந்தார். அதன் பிறகு, அவரே நேற்று நள்ளிரவு ஒரு மணிக்கு புறப்பட்டு வந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு தன் ஆறுதலைச் சொல்லி இருக்கிறார்.

இறந்த 40 பேரில் பெண்கள் 17 பேர், ஆண்கள் 13 பேர், குழந்தைகள் 9 பேர் இறந்திருக்கிறார்கள். இதில் ஆண் குழந்தைகள் 4 பேர், பெண் குழந்தைகள் 5 பேர். இந்த 40 பேரில் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 32 பேர், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 2 பேர், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 2 பேர், திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 2 பேர், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்திருக்கிறார்கள்.

40 பேரில் 30 பேரின் உடல்கள் பிரேத பரிசோதனை முடிக்கப்பட்டு, அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருக்கும் அமரர் ஊர்தி வைத்து, அவர்களின் ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இன்னும் 9 பேரில் உடல்கள் பிரேத பரிசோதனை நடந்துகொண்டிருக்கின்றன. இன்னும் 2 மணி நேரத்தில் அவையும் முடிந்துவிடும்.

நாங்கள் வந்த போது நான்கு பேரின் உடலுகளுக்கு நானும், நம் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், செந்தில்பாலாஜி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவசங்கர் உட்பட 7 அமைச்சர்கள் சார்பாக எங்களின் அஞ்சலியைச் செலுத்தியுள்ளோம். அவர்களின் உறவினர்களை தைரியப்படுத்தி இருக்கிறோம்.

**அரசு துணை நிற்கும்!**

இந்த அரசு எப்போதுமே அவர்களுக்குத் துணை நிற்கும். அவர்களுக்கு ஆறுதல் சொல்லமுடியாத மிகப் பெரிய இழப்பு இது. அரசு சார்பாக, என்னென்ன செய்ய முடியுமோ அதை செய்திருக்கிறோம். ஐ.சி.யூவுக்குச் சென்று, அங்கு இருக்கிற அனைத்து பாதிக்கப்பட்டவர்களையும் பார்த்து ஆறுதல் சொல்லியிருக்கிறேன்.

மருத்துவர்கள் தங்களால் முடிந்த பணிகளைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். இந்த கரூர் மாவட்டத்தில் இருக்கின்ற 200 மருத்துவர்கள், பணியாளர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இவைத் தவிர சேலத்தில் இருந்து 30 மருத்துவர்கள், நாமக்கல்லில் இருந்து 9 மருத்துவர்கள், மதுரையில் இருந்து 49 மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள், திண்டுக்கல்லில் இருந்து 22 மருத்துவர்கள், புதுக்கோட்டையில் இருந்து 3 மருத்துவர்கள், கோவையிலிருந்து 7 மருத்துவர்கள், திருச்சியில் இருந்து 25 மருத்துவர்கள், மற்ற மாவட்டங்களில் இருந்து 145 மருத்துவர்கள், கரூரில் இருந்து 200 மருத்துவர்களைச் சேர்த்து 345 மருத்துவர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

கரூர் மாவட்ட ஆட்சித் தலைவருடன் சேர்ந்து, திருச்சி மற்றும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஒருங்கிணைக்கும் பணிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள் என அனைவரும், விபத்தில் மரணமடைந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் உற்ற துணையாக நாம் அனைவரும் நிற்கிறோம்.

**அரசு முழு நடவடிக்கை எடுக்கும்!**

அவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பு. இந்த இழப்பு அதிகமாகக் கூடாது என்று மருத்துவர்களுக்கு அறிவுரை சொல்லியுள்ளோம். இதற்கு மேல் இழப்பு இருக்காது என்று நாங்கள் நம்புகிறோம். இனிமேல் இதுபோல் விபத்துகள் நடக்கக்கூடாது. அதற்கு இந்த அரசு முழுநடவடிக்கை எடுக்கும்.

ஓய்வுபெற்ற நீதியரசர் அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. எனக்குக் கிடைத்த தகவலின்படி, அவர்கள், மதியம் ஒரு மணியளவில் கரூர் மாவட்டத்திற்கு வர இருக்கிறார்கள். மருத்துவமனைக்கு வந்து, ஒவ்வொரு பாதிக்கப்பட்டவர்களிடமும் பெறும் கருத்துகளைப் பதிவு செய்வார்கள். விபத்து நடந்த இடத்துக்கும் அவர்கள் செல்ல இருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கின்ற அறிக்கைக்குத் தகுந்தபடி, முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் சட்டபூர்வமான நடவடிக்கைகளை விரைவில் எடுப்பார்கள்.

பத்திரிகையாளர் நண்பர்கள் நீங்கள் தயவுசெய்து மனிதாபிமானத்துடன் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். உயிரிழந்த, காயமடைந்த அனைவருக்கும் நாம் துணையாக, ஆறுதலாக இருக்க வேண்டும் என்று உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

**அரசியல் பேச விரும்பவில்லை!**

இதனைத் தொடர்ந்து நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அளித்த பதில்களின் விவரம் வருமாறு:

**கேள்வி:** பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைவாக இருந்ததால்தான், இந்த விபத்து நடந்திருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறாரே?

**துணை முதலமைச்சர் :** அது எதிர்க்கட்சித் தலைவர் வைக்கின்ற விமர்சனம். முதலமைச்சர் அவர்கள் நேற்று வந்து பார்த்து இருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே அதே இடத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு, தன் பிரச்சாரத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள். டி.ஜி.பி. அவர்கள் எவ்வளவு கூட்டம் வந்தது, எவ்வளவு கூட்டம் வரும் என்று சொல்லப்பட்டது, எவ்வளவு அதிகமான பாதுகாப்பு கொடுக்கப்பட்டது, எவ்வளவு தாமதமாக ஒவ்வொரு கூட்டமும் நடத்தப்பட்டுள்ளது என்று நேற்று தெளிவாக விளக்கம் சொல்லி இருக்கிறார். இந்த இடத்தில், நான் அரசியல் பேச விரும்பவில்லை. அதற்காகத்தான் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற நீதியரசர்கள் வருகிறார்கள். அவர்கள் தீர விசாரித்துவிட்டு, அவர்கள் அறிக்கை தாக்கல் செய்வார்கள், அப்போது மக்களுக்கு உண்மை தெரியும். அப்போது சட்டப்படி முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

**கேள்வி:** விஜய் வருவதற்கு முன்பே, கூட்ட நெரிசல் அதிகமாகிவிட்டது. பெரம்பலூரில் தடை செய்யபட்டது போல், இங்கும் அவரை வரவிடாமல் தடுத்து இருக்கலாமே சார்? அப்படி செய்திருந்தால் இவ்வளவு இழப்பு நடந்திருக்காது?

**துணை முதலமைச்சர்:** இது அனைத்து இயக்கத் தலைவர்களுக்கும் இருக்கின்ற உரிமை. மக்களை, அவர்களின் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை சந்தித்து பேசுவது அவர்களின் உரிமை, அது ஜனநாயக கடமை. அதை யாராலும் தடுக்க முடியாது. காவல்துறையினர் அந்தக் கூட்டத்தைப் பார்க்கும்போது, ``அவர்களிடம் மரத்தில் ஏறாதீர்கள், பொது மக்களுக்கு இடையூறாக இருக்காதீர்கள்" என்று பல விஷயங்களை வற்புறுத்தி சொல்லி இருக்கிறார்கள். இதற்குமேல் கட்டுப்படுத்துவது, அந்த இயக்கத்தின் தலைவர், இரண்டாம் கட்ட தலைவர்களின் பொறுப்பு அது. மேலும் அவர் சொன்ன நேரத்துக்கு வந்து பேசி விட்டுச் சென்றிருக்கவேண்டும். இந்த கேள்விகளை எல்லாம் நீங்கள் அவரிடம்தான் கேட்க வேண்டும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டியளித்தார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி. பி.எல்.ஏ. – 2 மற்றும் வாக்குச் சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் க.செல்வம் எம்.பி., தொகுதி பார்வையாளர் ராணி ரவிச்சந்திரன். எஸ்.ஆர்.அப்பாதுரை, ஒன்றிய செயலாளர்கள் க.குமணன், கெ.ஞானசேகரன், டி.குமார், பி.சேகர், பகுதிச் செயலாளர் ஆ. தசரதன், பேரூராட்சி மன்ற தலைவர் பொன். சசிகுமார் மற்றும் பலர் உடன் இருந்தனர்.




